திருத்துறைப்பூண்டி நகராட்சியின் நகர்மன்றக் கூடத்தில் 04–02–2019 திங்கட் கிழமை மாலை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டட அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.சே. நாகராஜன், எம்.ஏ.,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சியில் டுபிட்கோ கடன் நிதி 2018-19–ன் கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணி ரூ.102.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்:402 நாள்.12.11.2018–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>சதவீதம் குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி கண்ணன்</td><td rowspan="2">89,36,648/–</td><td>93,34,360/–</td><td>4.45 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திருமதி.எஸ்.மங்கை யர்கரசி</td><td>98,24,080/–</td><td>9.93 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு : –<br>
• வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.45 சதவீதம் அதிகமான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.பி. கண்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
<br><u>ந.க.எண்:.1596/2018/இ1</u></td><td>424</td><td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td></tr>
</table>

ஒம்/ சே. நாகராஜன்,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/

திருத்துறைப்பூண்டி நகராட்சியின் நகர்மன்றக் கூடத்தில் 28–02–2019 வியாழக் கிழமை மாலை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.சே. நாகராஜன், எம்.ஏ.,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் பிப்ரவரி–2019 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம். | **425** | **பதிவு செய்யப்பட்டது** |
| 2 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணியாற்றிய திரு.எம்.சிவக்குமார் என்பவரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயலாணை உத்தரவு ந.க.எண்.2375/2013/அ3 நாள் 14.12.2018ன்படி துறையூர் நகராட்சிக்கு பணியிடை மாற்றம் செய்து உத்தரவு வழங்கப்பட்டதன்பேரில் அன்னாரை இவ்வலுவலக செயலாணை உத்தரவு ந.க.எண்.1466/2018/எச்1 நாள் 18.12.2018ன்படி துறையூர் நகராட்சியில் பணியேற்க ஏதுவாக இந்நகராட்சி துப்புரவு பணியாளர் பணியிலிருந்து 18.12.2018 பிற்பகல் முதல் விடுவித்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br><br>அன்னார் துறையூர் நகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு அதிகாரம் இல்லை எனவும், பணியிட மாறுதல் உத்தரவினை ரத்து செய்ய கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.3829/2019 வழக்கு தொடர்ந்துள்ளார்.<br><br>எனவே, மேற்படி வழக்கினை எதிர்த்து நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்றம் அரசு சிறப்பு வழக்கறிஞர் திரு.வி.ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் வாதிடவும், அதற்கான வழக்கு கட்டணம் ரூ.15000/–ஐ செலுத்திட கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே வழக்கு தொகை ரூ.15000/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 1466/ 2018/எச்1** | **424** | **அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 3 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் த.நா.50எx6429 காம்பேக்டர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் Speed control certification–ஐ அரசு அங்கீகாரம் பெற்றள்ள M/S. T.V.Sundaram Iyengar & Sons (P) Ltd. நிறுவனம் மூலம் செய்துகொள்ளவும், இதற்கான செலவின கூடுதல் தொகை ரூ.11000/–ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br><br>அலுவலக குறிப்பு :<br><br>• மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>• வாகன பயன்பாட்டினை கருத்தில்கொண்டும், வாகன தகுதி சான்று பெற வேண்டியுள்ளதாலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.11000/–ஐ வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண் 3567/ 2018/எச்1** | **427** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |
| 4 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கம்பேக்டர் வாகன எண் த.நா.50ஏx6429–ல் 9 ஜாக்கில் 7 ஜாக்கில் ஆயில் கீல் பழுதாகி உள்ளதாலும் மற்றும் குப்பையை தள்ளும் மெயின் ஜாக்கியின் பட்டை ஆங்கில் பழுதாகி உள்ளதை சீர் செய்து தருவதற்கு M/S. T.V.Sundaram Iyengar & Sons (P) Ltd. நிறுவன கடிதம் எண் TVS/PDK/SER/2060 நாள் 25.02.2019ன்படி ரூ.80500/– (எண்பதாயிரத்து ஐநூறு மட்டும்) மதிப்பீடு தொகை ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வாகன பழுதுகளை சீர் செய்து கொள்வதற்கும், அதற்காகும் செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலக குறிப்பு : அனுமதியளிக்கலாம்.<br>**ந.க.எண் 323/ 2019/எச்1** | **428** | **அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>5</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியின் 2017–18ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் உரிய இணைப்புகளுடன் (Annual Accounts) தயார் செய்து கொடுத்த வகையில் திரு.ஜி.செல்வராஜ் அவர்கள் ரூ.25000/–(ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். எனவே அன்னாருக்கு மேற்படி தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>(ந.க.எண் 1011/ 2018/பி1)</td>
<td>429</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>6</td>
<td>இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19–ன் கீழ் பழைய பேருந்து நிலைய நிழலகத்தில் புதியதாக மேற்கூரை அமைக்கும் பணி ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 414 நாள் 31.12.2018-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 06.02.2019அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி.</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை.</th><th>சதவீதம் குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ். ஞானசுந்தரம்</td><td rowspan="2">5,25,000/–</td><td>4,62,266.50</td><td>0.007% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>எஸ்.மங்கையர்கரசி</td><td>4,62,970.00</td><td>0.140% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :
<ul>
<li>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.007 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.ஞானசுந்தரம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.</li>
</ul>
ந.க.எண்: 3166–2/2018/இ1</td>
<td>430</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>7</td>
<td>
இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19–ன் கீழ் வேதை சாலையில் நுண்ணுயிர் உரக்கூடம் (MCC Center) மேற்கூரை மாற்றும் பணி ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 410 நாள்.31.12.2018-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 06.02.2019அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி.</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம் குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.மங்கையர்கரசி</td><td rowspan="2">9,90,000/–</td><td>8,76,168.00</td><td>0.09% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>எஸ். மாரியம்மாள்</td><td>8,81,858.00</td><td>0.56% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :
<ul>
<li>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.09 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையர் கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.</li>
</ul>
ந.க.எண்: 3166–3 /2018/இ1
</td>
<td>431</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>8</td>
<td>இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19–ன் கீழ் வேதாரண்யம் சாலையில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள அம்மா உணவகத்தில் புதியதாக மேற்கூரை பொருத்துதல், உட்கூரை (Fall Ceilling) அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணி ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 411 நாள் 30.12.2018–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 06.02.2019அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td>
<td>432</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி. | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | எஸ்.மங்கையர்கரசி | 4,00,000/– | 3,43,940.00 | 0.003% குறைவு |
| 2 | எஸ். மாரியம்மாள் | | 3,46,475.00 | 0.73% அதிகம் |

அலுவலக குறிப்பு :

- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.003 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையர்கரசி என்ற ஒப்பந்த தாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.
- பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்: 3166–4 /2018/இ1

**9**

இந்நகராட்சியின் குடிநீர் நிதி 2018–19–ன் கீழ் புதிய பேருந்து நிலையம், அரியலூர் தெரு, அபிஷேக கட்டளை தெரு, சிங்களாந்தி, அண்ணா நகர், முத்துப்பேட்டை சாலை, தட்டாரத் தெரு, பள்ளிவாசல் தெரு மற்றும் புதிய பேருந்து நிலைய CWSS ஆகிய இடங்களில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் (OHT) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணி ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 413 நாள்.31.12.2018–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 06.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி. | மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | எஸ். ஞானசுந்தரம் | ரூ.2,50,000/– | 2,19,463.00 | 0.084% குறைவு |
| 2 | எஸ்.மங்கையர்கரசி | | 2,19,987.00 | 0.154% அதிகம் |

**433**

**அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

<table>
<tr>
<td></td>
<td>அலுவலக குறிப்பு :<br>• வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.084 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.ஞானசுந்தரம் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.<br>• பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 3166–5 /2018/இ1</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td>இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19–ன் கீழ் புதிய பேருந்து நிலையம், பழைய அலுவலக சமுதாய கூடம், அலுவலக Head Room மற்றும் அலுவலக சைக்கிள் பாதுகாப்பகம் ஆகிய இடங்களில் புதியதாக மேற்கூரை அமைக்கும் பணி ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 412 நாள்.31.12.2018–ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 06.02.2019அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி.</th><th>மதிப்பீடு</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>சதவீதம் குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.மங்கையர்கரசி</td><td rowspan="2">ரூ.1,70,000/–</td><td>1,36,035.00</td><td>0.09% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>எஸ். மாரியம்மாள்</td><td>1,38,630.00</td><td>1.81% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>• வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.09 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>• பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்: 3166–6 /2018/இ1</td>
<td>434</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>11</td>
<td>இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19–ன் கீழ் புதிய பேருந்து நிலைய கழிவறை, வடபாதி ஆற்றங்கரை தெருவில் உள்ள கழிவறை, வேதாரண்யம் சாலையில் உள்ள கழிவறை மற்றும் மன்னை சாலையில் உள்ள கழிவறை ஆகியவற்றிற்கு புதியதாக மேல்கூரை பொருத்துதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 409 நாள் 31.12.2018-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 06.02.2019அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி தினத்தில் பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திரு/திருமதி.</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீதம் குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>எஸ்.மங்கையர்கரசி</td><td rowspan="2">ரூ.9,00,000/–</td><td>7,51,138.00</td><td>0.02% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>எஸ். மாரியம்மாள்</td><td>7,62,936.00</td><td>1.55% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :
<ul>
<li>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள் வழங்கியுள்ள திருமதி.எஸ்.மங்கையர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 06.02.2019 அன்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.</li>
</ul>
ந.க.எண்: 3654 /2018/இ1</td>
<td>435</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>12</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு–C, பிளாக்–8, ந.அ.எண்கள் 2/5 (Old S.F.No.248/2B)–ல் 34444.80 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017 ஆகியவற்றின்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், தஞ்சாவூர் அவர்கள் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை குடியிருப்பு மனைப்பிரிவாக கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில்</td>
<td>436</td>
<td>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | (கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இயக்குனர் (தம) எண் 461/29018) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்காக்களை மனை உரிமைதாரர் திரு.ஜி.ஆர்.பத்மநாபன் என்பவர் பத்திரப்பதிவு ஆவண எண் 3199/2018 நாள் 31.12.2018 மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கியுள்ளதை ஏற்றுக்கொள்ளவும் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை உரிய நிபந்தனைகளக்குட்பட்டு வரன்முறை செய்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: (1) பத்திரப்பதிவு எண் 3199/2018 நாள் 31.12.2018 மூலம் இந்நகராட்சி ஆணையர் பெயருக்கு இனாம் சாசனம் செய்து வழங்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்காக்களை இந்நகராட்சி வசம் எடுத்துக்கொண்டு பராமரிப்பு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(2) நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் தஞ்சாவூர் அவர்களின் கொள்கையளவு ஒப்புதலில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை நிறைவு செய்வதால் மேற்கண்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறை செய்து ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3147/2018/எப்–1) | | |
| 13 | இந்நகராட்சிக்கு எதிராக திரு.ஆர்.கே. ஐய்யப்பன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் 29505/2018ன் மூலம் நீர் நிலை ஆக்கிரமிப்பு தொடர்பாக வழக்கு தொடுத்துள்ளார். எனவே, இந்நகராட்சி சார்பாக இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.வி.ஜெயப்பிரகாஷ் நாராயணன் அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் அவர்களை ஆஜராகி வழக்கு நடத்திடவும் அதற்காகும் செலவு தொகையினை செலவு செய்துக்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.3963/2018/எப்–1) | 437 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 14 | திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு–B, பிளாக்–5, புல எண்..–133/1பி2 விரிவு அபிவிருத்திதிட்டம் எண் –3ல் DD 18 மீட்டர் சாலைக்கும் மற்றும் FF 12 மீட்டர் சாலைக்கும் வரைவு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதில் திருமதி .ஆர் பரிமளாதேவி, A.S.V.R தினேஷ்குமார், A.S.V.R.சதீஷ்குமார் ஆகிய மனுதாரர்களுக்கு சொந்தமான இடத்தில் மேற்கண்டுள்ள DD சாலைக்காக 3294 சதுர மீட்டர் இடமும், FF சாலைக்காக 780 சதுர மீட்டர் இடமும் உள்ளடகியுள்ளதால், மனுதாரர் நகராட்சி எல்லையில் புறவழிச்சாலை அமைய உள்ளதால் தனது இடத்தில் அமைய உள்ள DD சாலை மற்றும் FF சாலையினை நீக்கம் செய்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து வழங்க கோரும் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>1. சர்வே வார்டு–B, பிளாக்–5, புலஎண் 133/1பி2 விரிவு அபிவிருத்திதிட்டம் எண்–3ல் DD சாலைக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள 3294 சதுர மீட்டர் இடத்தையும், FF சாலைக்காக 780 சதுர மீட்டர் இடத்தையும் நீக்கம் செய்து குடியிருப்பு பகுதியாக தினசரி ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ள நிலையில் பொது மக்களிடமிருந்து மேற்கண்டுள்ள பொருள் தொடர்பாக ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் எதுவும் பெறப்படவில்லை. எனவே நகர அபிவிருத்தியினைக் கருத்தில்கொண்டு விரிவு அபிவிருத்திதிட்டம் எண் 3–ல் அமைய உள்ள DD சாலை மற்றும் FF சாலை ஆகியவற்றை நீக்கம் செய்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்ய கருத்துருக்களை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூருக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2. பொது மக்களிடமிருந்து மேற்குறிப்பிட்டுள்ள பகுதிக்கு குறிப்பிட்ட நாளுக்குள் ஆட்சேபணை எழுப்பும் பட்சத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கு தெரிவித்து உரிய நடவடிக்கை | 438 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.239/2019/எப்–1) | | |
| 15 | இந்நகராட்சிக்கு எதிராக திரு.எம்.குணசேகரன் என்பவர் தனக்கு வாரிசு வேலை வழங்க வேண்டும் என கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு எண் 2766/2019–ல் இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.வி.ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆஜராகி நடத்திடவும், அதற்காகும் செலவு தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்துக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br><br>• மன்றம் அனுமதிக்கலாம்.<br>• உயர்நீதிமன்ற வழக்கு எண் 2766/2019–க்கு ஆகும் செலவு தொகையினை பொது நிதியிலிருந்து செய்துகொள்ள அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.193/2019/சி–1) | **439** | **அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 16 | இந்நகராட்சிக்கு எதிராக திருமதி பாக்கியலெட்சுமி என்பவரால் மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றம் திருத்துறைப்பூண்டியில் வழக்கு எண் 144/2015ன் மூலம் வழக்கு தொடுத்துள்ளதில் இந்நகராட்சி சார்பாக இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.டி.ஆனந்தன் என்பவர் ஆஜராகி மேற்கண்டுள்ள வழக்கில் இந்நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெற்றுள்ளதால், வழக்கறிஞர் கட்டணம் ரூ.3500/– வழங்க கோரி பட்டியல் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்டுள்ள வழக்கறிஞர் கட்டணம் ரூ.3500/– திரு.ஆனந்தன் என்பவருக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:<br>• மன்றம் அனுமதிக்கலாம்.<br>• மேற்கண்டுள்ள வழக்கறிஞர் கட்டணம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.5213/2015/எப்–1) | 440 | அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

ஒம்/சே.நாகராஜன்,
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/